2007 ஜனவரி 24]

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

மீன்சுருட்டி கால்நடை மருந்தகம் தற்போது சொந்தக் கட்டடத்தில்தான் இயங்கி வருகிறது. நபார்டு RIDF XII திட்டத்தின்கீழ் மீன்சுருட்டி கால்நடை மருந்தகத்திற்கு சுற்றுச் சுவர், மேல்நிலைத் தொட்டி மற்றும் கழிப்பறை கட்டுவதற்கு மட்டும் ரூ.9.10 இலட்சம் செலவிற்கான பிரேரணை பெறப்பட்டுள்ளது. நபார்டு RIDF XII திட்டம் தயாரிக்கும்போது இப்பணியும் சேர்க்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு)

[**குறிப்பு** : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. தகவல் கோரல்

(அ) பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு அணை கட்டுவதைத் தடுக்க நடவடிக்கை

திரு. சி. ஞானசேகரன்: Speaker Sir, *(குறுக்கீடு)* Speaker Sir... *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன, சொல்லுங்கள்? எதையாவது பேசக் கூடாது.

திரு. சி. ஞானசேகரன்: இல்லை, எதையாவது இல்லை. ஏற்கெனவே எங்களுடைய மாவட்டத்தினுடைய மிக மிக முக்கியமான ஒரு பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் அப்பொழுதே என்னிடம் கேட்டது, 'நான் ஏதாவது பேச வேண்டும், என்றுதான்.

திரு. சி. ஞானசேகரன்: இல்லை, இல்லை. நான் குறிப்பிட்டே கேட்கிறேன். பாலாற்றில் ஏற்கெனவே அணை கட்டுவதற்கு ஆந்திர அரசு 28 ஆம் தேதி, தேதி குறித்துவிட்டு அடிக்கல் நாட்டுவது குறித்து அறிந்து எங்களுடைய மாவட்டம் கொந்தளித்து, இப்போது பல

[திரு. சி. ஞானசேகரன்] [2007 ஜனவரி 24

ஆர்ப்பாட்டங்களையும் போராட்டங்களையும் நடத்திக் கொண்டிருக்கிறது. ஆகவே, தமிழக அரசு அங்கே பாலாற்றின் குறுக்கே கணேசபுரம் என்ற இடத்தில் இப்பொழுது குப்பம் அருகில் ஆந்திர முதலமைச்சர் 28 ஆம் தேதி அணை கட்டுவதற்கு 30 கோடி ரூபாயிலே கட்டப்படக்கூடிய அந்த அணைக்கு அடிக்கல் நாட்டு விழா நடத்தாமல் தடுப்பதற்குத் தமிழக அரசு எடுக்க இருக்கிற நடவடிக்கை என்ன? மத்திய வனத் துறை அமைச்சர் மூலமாகவாவது அல்லது அந்த ஆந்திர முதல்வரோடு பேசியாவது தமிழக அரசு ஏதாவது உடனடியாக நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்பதை நேற்றுகூட நான் எழுப்பியிருக்கிறேன். இன்று அரசு அதுகுறித்து ஏதாவது இந்த அவைக்கு அறிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல, ஆந்திர அரசு குப்பம் பகுதியிலே அப்படிப்பட்ட அணை கட்டுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளுமானால், ஆந்திர அரசோடும் பேசி, நம்முடைய மத்திய வனத் துறை மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சரிடத்திலேயும் பேசி அதைத் தடுத்து நிறுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள இந்த அரசு முயற்சி செய்யும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் ஒரு நல்ல பதிலைச் சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும்கூட, இந்த குப்பம் பகுதியிலே ஆந்திர அரசு கட்டக்கூடிய அணைக்கு வரும் 28 ஆம் தேதி அடிக்கல் நாட்டப்படும் என்ற செய்தி பத்திரிகைகளிலே வந்திருக்கின்றது. அது மக்கள் மத்தியிலே, அந்த மூன்று மாவட்ட மக்கள் மத்தியிலே, மிகப்பெரிய பீதியை உண்டாக்கியிருக்கிறது. ஆகவே, 28 ஆம் தேதி என்பது. குறுகிய காலமாக இருக்கின்ற காரணத்தால், அரசு விரைவாக நடவடிக்கை எடுத்து, அணை கட்டுவதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்ற வேண்டுகோளை வைத்து, அரசு உடனடியாக அதை முன்னெடுத்துச் செய்யுமா என்பதையும் அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு)

2007 ஜனவரி 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: (குறுக்கீடு) நீங்களும் அதே subject-தானே பேசப் போகிறீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகைகளிலே செய்திகள் வந்திருந்தாலும்கூட, பொதுவாக பாலாற்றிலே எப்போது தண்ணீர் வருகிறது என்பது இங்கே இருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் தெரியும். மழை பெய்தால் தண்ணீர் வருகிறதே தவிர, அங்கே கர்நாடகாவிலேயிருந்து அணையைத் திறந்து தண்ணீர் வருவது என்பது பத்தாண்டுகளுக்கு ஒரு முறை அல்லது பதினைந்து ஆண்டுகளுக்கு ஒரு முறைதான். இதற்கிடையிலே, பல அணைகளை அந்தப் பகுதியிலே கட்டிவிட்டார்கள். இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினருடைய உணர்வுகளைப் புரிந்துகொண்டு இந்த அரசு தக்க நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சி செய்யும்.

(ஆ) பண்ருட்டி, முந்திரி ஏற்றுமதி மையம் அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பண்ருட்டி சட்டமன்றத் தொகுதியின் உள்ளடங்கிய பகுதியில், முந்திரி விவசாயம் அதிகமாக உற்பத்தியாகின்ற காரணத்தினால், முந்திரி விவசாயிகளுக்கு ஏற்றவாறு, அங்கு ஓர் ஏற்றுமதி வணிக வளாகம் அமையவேண்டுமென்று நான் கடந்த ஐந்து ஆண்டுகாலமாகக் குரல் கொடுத்தேன், அது நடைபெறவில்லை. ஆனால், கடந்த கூட்டத் தொடரில் நான் குரல் கொடுத்தேன். மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள், அதற்கான நிதி 10 கோடி ரூபாயில் முந்திரி வணிக வளாகம் அமையும் என்று அறிவித்தார். அப்படி அறிவித்ததனுடைய அடிப்படையிலே, நேற்றைய முன்தினம் நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களோடு, துறையினுடைய அதிகாரிகள் அங்கே ஆய்வு செய்திருக்கிறார்கள். அப்படி ஆய்வு செய்து, அங்கு ஆயிரக்கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும் என்கின்ற நல்ல செய்தியையும் அறிவித்திருக்கிறார்கள். ஆனால், தொடர்ந்து ஐந்து ஆண்டுகாலமாக முந்திரி தொழிற்சாலை அமைய வேண்டிய இடம் பண்ருட்டி என நான் வேண்டுகோள் வைத்தேன். நம்முடைய மின் துறை அமைச்சர் அவர்கள் வருகை தந்தபோதும் நான் அந்தக் கருத்தை